கிறது என்று குறிப்பிட்டார்கள். நண்பர் திரு. சுப்பையா அவர்கள், உண்மையைப் புரிந்து கொண்ட நிலையில், அரசாங்க அதிகாரிகள் இருந்து இந்த வேலை நடைபெறவில்லை என்பதையும், தனிப்பட்ட ஒப்பந்தக்காரர் களால்தான் வேலை நடைபெற்றிருக்கிறது என்பதையும் விளக்கியிருக் கிறார்கள். எப்படியிருந்தாலும், விபத்து காரணமாக உயிரிழந்த தொழி லாளர்களுடைய குடும்பங்களுக்கும், காயம் அடைந்த தொழிலாளர் களுடைய குடும்பங்களுக்கும் நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி விக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த ஒப்பந்தப் பணி சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் என்கிற ஒப்பந்தக்காரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்கள் அந்த வேலையை நடத்தி வந்தார்கள். அப்படி நடைபெறும் போது, தரையிலிருந்து 23 அடி உயரத்தில் 4 இரும்பு உத்தரங்கள் கொடுக்கப்பட்டு, இந்த ஆலை இல்ல மேடை 40-க்கு, 40, 6" கன அளவில் அமைக்கப்பட்டது. கலவை போடும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, கற்கலவை சரிந்து, ஏணியிலிருந்து ஏற்றிக்கொண்டிருந்த 4 தொழிலாளர்களும் கீழே இருந்த தச்சர் ஒருவரும் பாதிக்கப்பட்டார்கள். 4 பேர் இறந்தார்கள். 42 பேர்கள், 22 ஆண்களும், 20 பெண்களும் காயம் அடைந்திருக்கிறார்கள். மருத்துவ மனையில் 30 பேர்கள் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். இராஜபாளையம் அரசு மருத்துவ மனையில், 12 ஆண் களும், 16 பெண்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். 2 ஆண்கள் மதுரை மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டனர். 3 பேர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டனர். 9 பேர்கள் இராஜ பாளையத்தில் மருத்துவரால் அவுட்-பேஷன்ட்டாக சிகிச்சை அளிக்கப்படு கிறார்கள்.

காயம் அடைந்து இறந்த தொழிலாளர்களுக்கு தொழில் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் ஒப்பந்தக்காரர்கள் இழப்பீடு தரவேண்டும் என்றும் இருக்கிறதற்கு ஏற்ப, உயிர் இழந்தவர்களுடைய குடும்பங்களுக்கு, தொடக் கச் செலவுக்காக ஒரு குடும்பத்திற்கு ரூ. 250 என்று கொடுத்திருக்கிறார் கள். தொடர்ந்து அந்த உதவியைச் செய்வார்கள் என்று எதிர்பார்க் கிறோம். அவர்கள் அதைச் செய்யத் தவறினால் நஷ்ட ஈடுகொடுக்கும்படி வற்புறுத்த எல்லாவிதமான நடவடிக்கையும் அரசு எடுக்கும். திரு. மார்டின் குறிப்பிட்டது போல. அரசாங்க அதிகாரிகள் பொதுத் துறையில் நடவடிக்கை எடுத்தபோது ஏற்பட்ட அசம்பாவிதம் இல்லை என்றாலும், ஏற்பட்ட சம்பவம் வேதனைக்குரியது. ஆகவே, அது அரசின் அன்றாட அலுவல்களில் வருகிறது.

திரு. சுப்பையா அவர்களின் யோசனையைப் பரிசீலிக்கலாம். ஆனால், எல்லாக் கட்டடங்களையும் அரசாங்க அதிகாரிகளே நேரிடையாகக் கட்டுவது இயலாத காரியம், அதோடு, தொடர்ந்து இருக்கும் வழக்கத்தை ஒட்டி, சில பணிகளுக்கு டெண்டர் விட்டு, ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்கிறோம் என்ற நிலை இருக்கிறது. ஆக, இது அரசின் அன்றாட அலுவல்களில் வரு கிறது என்கிற காரணத்தால் இது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு உகந்தது அல்ல, இதைப்பற்றி விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சருடைய விளக்கத்தை ஒட்டி, இதற்கு அனுமதி கொடுக்க மறுக்கிறேன்.

(3) அரசினர் தீர்மானம். விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு .மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" சட்டப் பேரவையின் 244-வது விதியின் கீழ், 41-வது விதி (3)-வது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்ற ப்பட்டது.